PR/2018/32T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

நவம்பர் 29 2018

**ஜப்பானிய அரசாங்கத்தின் உயர் கௌவரம் பெற்ற அமரர் திரு. பி.பீ. முனசிங்க**

ஜப்பானிற்கும் இலங்கைக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியமைக்காக அமரர் புஞ்சி பண்டா முனசிங்கவிற்கு 2018 நவம்பர் 22ம் திகதியன்று, உதய சூரியன் பொற்கதிர்களுடன் கூடிய கழுத்துப் பட்டி கொண்ட தன்னுடைய அதியுயர் கௌரவத்தை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியது.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் துடிப்புமிக்க நம்பகரமான நிர்வாக பணிப்பாளராக திகழ்ந்த அமரர். திரு. புஞ்சி பண்டா முனசிங்க இலங்கைக்கான ஜப்பானிய பட்டப்பின் படிப்பு பழைய மாணவர்கள் சங்கத்தை ஸ்தாபிப்பதில் தன்னை அர்ப்பணித்து அதன் ஸ்தாபக செயலாளராக விளங்கினார். 2007ல் அந்த சங்கத்தின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டார். ஜப்பான் தொடர்பான பல கருத்தரங்குகள் விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடுசெய்வதில் அவர் முன்னின்று செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த செயற்பாடுகள் மூலமாக இலங்கைக்கும் ஜப்பானிற்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்ப்பதில் பெரும் பங்களிப்பை ஆற்றியிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த 2018 ஒக்டோபர் 3ம் திகதி காலமான அமரர். திரு.. முனசிங்கவிற்கு ஆழ்ந்த இரங்கல்களையும் உயரிய மரியாதையையும் ஜப்பானிய தூதரகம் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றது.

************************************************************

மேலதீக விபரங்களுக்கு கலாசார பிரிவினரைத் தொடர்புகொள்க
தொலைபேசி: 011-269-3831~3 (ext.227)